REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 26உ வியாழன் (11—11—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 27உ வெள்ளி (12—11—54) [இதழ் 129

## விபத்துக்களே இல்லாத ரயில்வே!

சென்ற ஆண்டில் பிரிட்டிஷ் ரயில்வேயில் விபத்துக்களே ஏற்படவில்லை என்று சொல்லக்கூடிய அளவில், ரயில்வே பிரயாணம், பாதுகாப்பாக இருந்தது. அபூர்வமாக ஏற்பட்ட ஒருசில விபத்துக்களை கணக்கிட்டால் சராசரியாக 7,10,00,000 பிரயாணிகளில் ஒருவர் உயிரிழந்திருக்கிறார். 2,70,00,000 பேர்களில் ஒருவருக்குக் காயமேற்பட்டிருக்கிறது. 1953-ம் ஆண்டு அறிக்கையைப் பற்றி பத்திரிகை நிருபர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது பிரிட்டிஷ் போக்குவரத்து கமிஷனின் தலைவர் சர். பிரையான் ராபர்ட்சன், "ரயில்வே நிர்மாணத்தில் நாம்தான் வழிகாட்டிகள்; உலகத்திலேயே மிகச் சிறப்பாக ரயில்வே நிர்வாகம் செய்வது நாம்தான்" என்றார்.

# 'ம. பி. முதல்மந்திரி அதிகாரத்தை தீய வழியில் செலுத்தினார்'

## 'செய்த உதவிக்குக் - கைம்மாறு பெற்றார்'

### ரவி சங்கர் சுக்லா மீது தலைமை உயர் நீதிமன்றத்தில் வழக்கு

### வழக்குத் தொடருவதை உயர் நீதிமன்றம் அனுமதித்துள்ளது

நாகபுரி, நவ. 8—

..த்திய பிரதேச காங்கிரஸ் முதல் அமைச்சராக இருந்துவரும் ரவி சங்கர் சுக்லா, தனது அதிகாரத்தை தீய வழியில் செலுத்தினார் என்றும், செல்வாக்கை உப யோகித்து கைமாறு ஏற்றார் என்றும், அவர்மீது இந்திய நீதி மன்றத்தில் வழக்குத் தொடர, ம. பி. மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் கூட்டுச்செயலாளராக உள்ள அப்துல் ரெகமான் பரூகி அவர்களுக்கு, நாகபுரி உயர்நீதி மன்றம் அனுமதி கொடுத்திருக்கிறது.

மந்திரி சுக்லா மீது மேற்கூறிய குற்றச்சாட்டுகளைக் கொண்ட வழக்கொன்றை, இ. பி. கோ. 197-வது பிரிவின் கீழ், மாஜிஸ்திரேட் கோர்ட்டில் பரூகி தொடுத்தார்.

இந்திய அரசியல் சட்டம் 134(1)-வது பிரிவில் கண்டுள்ளபடி, அமைச்சர்களை நியமிப்பது ஒரு கவர்னரின் அதிகாரத்துக்கு உட்பட்டதாக இருப்பதால், வழக்குத் தொடருமுன் கவர்னரின் அனுமதி பெறவேண்டியது அவசியமாகிறது எனவும், அத்தகைய அனுமதியை மந்திரி மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கிற்கு முன்கூட்டியே பெற்றில்லாத காரணத்தால், வழக்கைத் தள்ளிவிடுவதாக மாஜிஸ்திரேட் குறிப்பிட்டு, வழக்கை எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டார்.

*அதன் பிறகு, நீதிபதி சவுத்திரி முன், மேற்படி வழக்கை பரூகி தொடுத்தார். அவரும், இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள மேற்படி விதியைக் காரணங்காட்டி, அப்பீல் மனுவைத் தள்ளிவிட்டார். இருந்தாலும், நீதிபதி அவர்கள் இ. பி. கோ. 197-வது பிரிவின் கீழ், சர்க்கார் அதிகாரிகளின் மீது வழக்குத் தொடுப்பதற்கு இடமிருக்கிறது எனத் தம் கருத்தையும் அறிவித்திருந்தார்.*

*முன்னர் உயர்நீதி மன்றம் தந்த தீர்ப்பை விலக்கல் செய்து, இந்திய நீதி மன்றத்தில் சுக்லா மீது வழக்குத் தொடர உயர்நீதி மன்றம் அனுமதி கொடுக்க வேண்டுமென, பரூகி உயர் நீதிமன்றத்தில் வழக்கிட்டார். மனுவை விசாரித்த*

(4-ம் பக்கம் பார்க்க)

# மழலை மொழியும் குழவி-தி. மு. கழகம்; மனம் மகிழும் தாய்-நாட்டு மக்கள்!

## கூர் ஏறிய வாள் எதிரிகளை இரையாக்கியே தீரும்

## திராவிடரின் எழுச்சி அவர்களுக்கு விடுதலை பெற்றுத் தரும்!

### மக்களின் விடுதலை உணர்வு பற்றி அண்ணாவின் படப்பிடிப்பு

"மக்கள்—திராவிடர்கள், தங்களின் விடுதலைக்காகத் துடிதுடிக்கிறார்கள்; திராவிட முன்னேற்றக் கழகம், 'விடுதலை கோரும் மக்களின் எழுச்சி, நிச்சயமாக அவர்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தரும்', என்ற ஆழ்ந்த நம்பிக்கையைக் கொண்டிருக்கிறது. மக்களிடையே இன்று தோன்றியுள்ள விடுதலை உணர்ச்சியை—திராவிடத்தின் எழுச்சியைக் கண்டு நாம் மனமகிழ்கிறோம். மக்களுக்கு விடுதலை உணர்வு ஏற்பட்டு விட்டது என்பதறியப் பெருமைப்படுகிறோம்.

"வாள், கூர் ஏற்றுவிட்டது; என்றாவது ஒருநாள்—இன்றில்லாவிடினும் நாளை—எதிரியை கூற்றத்திற்கு இரையாக்கும் கூர்மை, அந்த வாளுக்கு உண்டு.

"கதிரவன் தோன்றிவிட்டான் — இக்கணமில்லாவிடினும், மறுகணம் நிச்சயமாக, பனித் துளிகள், கதிரவனின் வெம்மையால் மறையத்தான் போகின்றன.

*"இதைத்தான்—தென்னாட்டு மக்கள் பெற்றிருக்கும் விடுதலை உணர்வைத்தான்—எழுச்சியைத்தான்—சிறந்த எழில் ஓவியம் போன்று தீட்டிக்காட்டுகிறது, இந்தக் கூட்டம்.*

"நகரங்களிலே மட்டுமல்ல—பட்டிகளில்—தொட்டிகளில், சாதாரண குக்கிராமங்களில் எல்லாம் இந்த விடுதலை உணர்வு—அந்த உணர்வு பெறத் தேவையான அறிவுத்தாகம்—ஏற்பட்டிருக்கிறது.

*—இவ்வாறு, 9—11—54 மாலை, சென்னை தோழமைக் கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தி.மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.*

*தொடர்ந்து அவர் பேசியதாவது :—*

*"திராவிட முன்னேற்றக் கழகத்தார் தினம் தினம் எங்காவது, நாட்டின் பல பாகங்களிலும், நாள் தவறினாலும், கூட்டம் போடுவது தவறாமல் பிரச்சாரப் பணியிலே ஈடுபட்டு வருகிறார்களே ஏன்?*

*கம்யூனிஸ்டு நண்பர்கள் என்றால், அவர்கள், பிரச்சினைகள் தோன்றும்போது மட்டும் மக்களிடம் பேசுகிறார்கள்.*

"பாகிஸ்தான் அமெரிக்காவுடன் செய்துகொண்ட இராணுவ ஒப்பந்தம்—அதைக் கண்டிக்க; ரஷ்யாவில் நடைபெற்ற நவம்பர் புரட்சி தினம் — அதைக் கொண்டாட; கொரியாவிலே நடைபெற்ற கிருமி யுத்தம்—அதைக் கண்டிக்க; மே-தின விழா—அதைக் கொண்டாட —இப்படிச் சில பிரச்சினைகளும், சம்பவங்களும் நிகழும்போதுதான் கம்யூனிஸ்டுகள், மக்களைக் காண்கிறார்கள்!

பி.-சோ. கட்சியினர்—அவர்கள் கூட அப்படித்தான்!

காங்கிரஸ்காரர்கள் — அவர்கள், காந்தியார் பிறந்த நாள் விழா,— இறந்த நாள் நிகழ்ச்சி-சுதந்திர தின கொண்டாட்டம்—குடியரசு தினம் —இப்படிச் சில இறந்த கால நிகழ்ச்சிகளை மட்டும் கொண்டாடுகின்றனர்.

ஆனால் ஒரு இயக்கம் மட்டும்—திராவிடர் இயக்கம் மட்டும், தினம் தினம் கூட்டம் நடத்துவானேன்? நடத்துகிற கூட்டங்கள் எல்லாவற்றிற்கும் ஆயிரமாயிரமாக மக்கள் ஆர்வத்துடன் கூடுவானேன்?

*இந்தக் கூட்டம் துவங்குவதற்கு முன்னால் அரைமணி நேரத்திற்கும் அதிகமாக மின்சாரம் தடைபட்டது; அதனால் ஒளி விளக்கில்லை; ஒலிபெருக்கி இல்லை. அந்த நிலையில், அரைமணி நேரத்துக்கும் அதிகமாக, கூடியிருக்கும் ஆயிரமாயிரம் பேரும் அமைதியாக அமர்ந்திருப்பானேன்—மின்சாரம் வரட்டும்; கூட்டம் துவங்கட்டும் என்பதுதானே! அமைதியோடு காத்திருந்த உங்களை மனதிற்குள்ளேயே பாராட்டிக் கொண்டேன்.*

*இப்படி எல்லாம் மக்கள் கூடுவதும், காத்திருப்பதும் எதற்காக? இன்று, என்ன—தி. மு. கழகம், ஏதேனும் போராட்டம் குறித்து, அதற்கான விளக்கம் தரப்போகிறதா? அல்லது வேறேதும் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளனவா—அவை பற்றிப் பேச; இல்லையே! நேற்று நீங்கள் கேட்டதைத்தான், இன்றும், பேசப்போகிறோம்—பேசுகிறோம்; என்றாலும் மக்கள் திரும்பத்திரும்ப, கேட்ட பொருள் ஒன்றையே கேட்பதற்கு அடிக்கடி ஆயிரமாயிரமாகக் கூடுகிறார்கள் என்றால் ஏன்?—எண்ணிப்பார்க்க வேண்டும் ஏனைய கட்சி நண்பர்கள்.*

*மக்கள் இப்படிக் கூடுவதற்குக் காரணம் இல்லாமலா இருக்க முடியும்?*

*மக்களின் எண்ணங்கள், ஆசாபாசங்கள், இலட்சியங்கள், கொள்கைகள் ஆகியவைகள் இங்கு பேசப்படுகின்றன. அவர்கள் உள்ளத்திலே ஊறிக் கொண்டிருக்கும் எண்ணங்கள் இங்கு எதிரொலிக்கின்றன—அதனால்தான் மக்கள், இக்கூட்டங்களில் இவ்வாறு திரளுகின்றனர்.*

குழந்தை மழலை மொழிகிறது—கட்டி முத்தமிடுகிறாள் தாய்! கன்னத்திலே குழிவிழச் சிரிக்கிறது குழந்தை—வாரி அணைத்துக்கொள்கிறாள் தாய்!

*இப்படி குழந்தை சிரிக்கவும், மழலை மொழியவும் செய்வது,*

(4-ம் பக்கம் பார்க்க)

# மக்களின் அறிவுத் தாகம் - நாட்டு விடுதலையின் அறிகுறி!

*'அமெரிக்காவில் ஆட்சிபுரியும் ஐசன்ஹோவர் எப்படிப் பட்டவர்?'—கேட்கிறார்கள் மக்கள்!*

*'பண்டித நேரு சீனாவுக்குப் போயிருக்கிறாராமே; சீனாவில் மக்களாட்சி நடைபெறுகிறதென்கிறார்களே; மக்களாட்சியின் மாண்பு என்ன?—வினவுகிறார்கள் மக்கள்!*

*'திராவிட நாடு, திராவிடருக்காக வேண்டுமென்கிறீர்களே; திராவிட நாடு என்றால் என்ன? அது கிடைத்தால் என்ன இலாபம்?'—தெரிந்துகொள்ள ஆசைப்படுகின்றனர் சாதாரண மக்கள்!*

இந்த அறிவுத் தாகம், ஒரு நாடு விடுதலை பெற முற்பட்டு விட்டது என்பதற்கான அறிகுறிகளில், இன்னுமொன்று!

*ஒருவன் நோய்வாய்ப்பட்டிருக்கிறான்; 40 நாள் நடமாட்டமே கிடையாது; படுத்த படுக்கையாயிருந்தான்; பின்னர் மருந்து சாப்பிட்டு, நோயிலிருந்து விடுபட்டு வருகிறான் என்றால், அதற்கு சில அறிகுறிகள் உண்டு. ஒருவன், நோயிலிருந்து விடுபட்டு விட்டானா, இல்லையா என்பதை, அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே கூறிவிடலாம்—சில அறிகுறிகளைக் கொண்டு!*

*நோய்வாய்ப்பட்ட ஒருவனைப் பார்த்த அவன் நண்பன், 'பரவாயில்லை; உன்னைப் பிடித்திருந்த நோய் விலகிவிட்டது; உன் கண்களிலிருந்த சோர்வு நீங்கி, ஒளி தோன்றுகிறது; மங்கி, சோபை இழந்திருந்த உன் முகத்திலே பொலிவு தோன்ற ஆரம்பித்துவிட்டது; இன்னும் சில நாளில், உடம்பிலே இப்போதில்லாத வலு ஊட்டப்பட்டுவிட்டால்—அதற்கான வலுவூட்டத்தக்க 'டானிக்' சாப்பிட்டால், உன் உடம்பு பழைய நிலைக்கு வந்துவிடும்; பயப்படாதே,' என்று கூறுவதுபோல, 'ஆரியம்' எனும் நோய், இந்நாட்டு மக்களைப் பிடித்திருந்த நிலைமாறி, அவர்களின் கண்களிலே ஆர்வமும், முகத்திலே அறிவொளியும், உள்ளத்திலே விடுதலை ஆர்வமும் தோன்றியுள்ளன—என்று நாம் கூறுகிறோம்.*

முடக்குவாதங்கள் பல இடக்கு செய்தாலும், மக்கள் முன்னேற்றம் பெற்று வருவதை-அறிவுத் தெளிவு பெறுவதை-விடுதலை ஆர்வம்கொள்வதை, இனியும் எவராலும் தடுக்கமுடியாது.

'திராவிடர்கள் ஆரியப்பிடியிலிருந்து விடுதலை பெற்றுவருகிறார்கள்,' என்று நான் கூறும்போது, 'அவர்கள், ஆரிய வருகைக்கு முன்பிருந்த பழங்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆந்திர சட்ட சபை கலைக்கப்படும்!

### குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சி!

இந்த வாரத்தில் ஆந்திர மந்திரி சபையின்சார்பில் முதன் மந்திரி பிரகாசம் தந்த ராஜினாமாவை, கவர்னர் திரிவேதி ஏற்றுக்கொள்வார் எனத் தெரிகிறது.

டெல்லியிலிருந்து வெகு சீக்கிரத்திலேயே சட்டசபை கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவரின் நேரடியான ஆட்சிப் பிரகடனம் செய்யப்படுவதற்கான உத்தரவு வருமென்று சொல்லப்படுகிறது.

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்..அண்ணுதுரை

சென்னை 11—11—1954 வியாழன்


# அவர்களா கற்பார்கள்?

தங்கள் சொந்தத் தாய் மொழியாம் இந்தியை, பொதுவாக பிற மொழி வழங்கும் பகுதிகளிலும், குறிப்பாக திராவிட இன மொழிகள் வழங்கும் பகுதிகளிலும் பரவச் செய்வதற்கு, வட நாட்டு இந்தி மொழி வெறியர்கள், அச்சுறுத்தியும் அன்புரை கூறியும் முயற்சித்து வருகின்றனர் என்பதை நேற்று விளக்கி இருந்தோம். இன்றும் அதைத் தொடர்ந்தே மேலும் சில கூறுகிறோம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தியத்தின் ஆதிக்கம் இந்தியத் துணைக்கண்டத்தில் நிலைபெற்ற பிறகு, ஆங்கிலம் ஆட்சி மொழியாக்கப்பட்டது. ஆங்கில. மொழியைக் கற்றால்தான் 'கும்பெனியான் கோழி மேய்க்கக்கூடும்' என்ற ஒரு கட்டாய நிலை இங்குள்ளவருக்கு உண்டாயிற்று. மெள்ள மெள்ள ஆங்கிலம் பரவலாயிற்று. ஆட்சி மன்றங்களிலும் அறமன்றங்களிலும் அம்மொழி உச்சம் பெற்றது. அரசியலார் அலுவலகங்களிலும் அம்மொழிக்குச் சிறப்புண்டாயிற்று.

ஆங்கிலம் புகுந்ததால், மேற்குறிப்பிட்ட இடங்களில் எல்லாம் ஆட்சி செய்து வந்த தமிழ் விரட்டி அடிக்கப்பட்டது. அதன் எதிரொலியாகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ் இரண்டாம் நிலையைப் பெற்றது. இதனுல், ஏற்கனவே தமிழ் வழங்கி வந்த விரிவு குறுகிப் போகலாயிற்று.

அரசியலில் ஆங்கில ஆட்சி ஆதிக்கம் பெற்றதின் காரணமாக, தமிழின் விரிவும் வளர்ச்சியும் தேய்ந்து போனது உண்மை. அந்தத் தேய்வைத் துரிதமாக்கிற்று, தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர் கையில் கல்வித் துறை சிக்கிக்கொண்டிருந்த காரணத்தால்.

அரசியல் பிடி பிற மொழியினர் கை சிக்கினுல், அடிமையாக்கப்பட்ட மக்களின் தாய்மொழி சீரழிந்து தேய்ந்தொழியும் என்பதற்கு, பிரெஞ்சிந்திய வரலாறும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழ் நாட்டுப் பகுதியில் உள்ள புதுவை-காரைக்காலும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் பிடிக்குள் அடங்கிவிட்டது. அரசியல் துறையில் ஏற்பட்ட அடிமைத்தனம், அங்குள்ள மக்களின் தாய்மொழியாம் தமிழைக் கெடுத்து, அரசியல் எஜமானர்களின் பிரெஞ்சு மொழிக்கு உச்சத்தைக் கொடுத்தது. தமிழ் உருக்குலைந்தது; பிரெஞ்சு வளம் பெற்றது!

முதலில் அரசியல் துறையில் அடிமை; இரண்டாவதாக மொழித் துறையில் கொடுமை. பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களின் வரலாறு, இதனை மெய்ப்பிக்கும் மறுக்க முடியாத எடுத்துக்காட்டு.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி மொழியாக இந்தி மொழியை ஒப்புக்கொண்டாக வேண்டிய கட்டாயத்தில் திராவிடர்—தமிழர் இன்று உள்ளனர். இந்த மொழித் திணிப்பு, நமது திராவிடத்தின் அரசியல் வடவர் பிடியில் சிக்கிக் கிடக்கிறது என்பதை வலியுறுத்தும் சான்ருகும். திராவிட அரசியலில் வடவர் ஆதிக்கம் நிலைபெற்றுள்ளதும், அவர்கள் தாய்மொழியாம் இந்தி, தரணி ஆளக் கிளம்பி இருக்கிறது என்பதில் நமக்கு ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

அரசியலார் அலுவலகங்களில் பதவி பெற வேண்டுமானுல், கட்டாயமாக இந்தி கற்றுத்தான் ஆகவேண்டும் என்ற நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. சில இனங்களில் இதை நேர்முகமாகவும், பல இனங்களில் இதை மறைமுகமாகவும் வலியுறுத்தி வருகிறது இந்தியப் பேரரசு. இத்தகு சூழ்நிலையில், சென்னை மாநிலத்தின் ஆட்சி மொழியாக தமிழ் ஒப்புக்கொள்ளப்பட்ட போதிலும், இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி மொழியாக ஆங்கிலம் இருந்துவந்த காலத்தில், வளர்ச்சி பெற தமிழுக்கு எந்த அளவு வாய்ப்பு இருந்ததோ, அதே அளவு வாய்ப்புத்தான் தமிழ் ஆக்கத்திற்கு இப்பொழுதும் இருக்க முடியும். எனவே, ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் தமிழுக்கு ஒதுக்கப்பட்டிருந்த அதே இரண்டாந்தர இடத்தில்தான், இந்தியப் பேரரசின் இந்தி ஆதிக்கத்திலும் தமிழ் வைக்கப்பட்டுக் கிடக்கும்—கிடக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இத்தகு நடைமுறை உண்மைகள் நம் கண்களுக்குப் புலனுகாமல் மறைந்துவிட வேண்டும் என்ற கெடுமதி கொண்டுதான் இந்தி வெறியர்கள் பலரும், தம் எதேச்சாதிகாரத்தினுல் இந்தி மொழியை ஆட்சி மொழியாக நம் மீது திணித்துவிட்டு, அதுபற்றி ஒன்றும் அறியாதவர்கள் போல, நாம் அம்மொழியை மனமுவந்து ஒப்புக்கொண்டதாகக் கதை கட்டி, நமது விரிந்த நெஞ்சுக்குப் பாராட்டும் தெரிவிக்கும் பாதகச் செயல் புரியக் கிளம்பியுள்ளனர். அவர்கள் மாய்மாலச் சொற்களில் மயங்கக் கூடாது; நமது எதிர்ப்பைத் தளரவிடக் கூடாது; அதற்கு மாருக முன்னிலும் மும்முரமாக இந்தி மொழி பரவலை எதிர்ப்பதென சூளுரைத்துக் கொள்ள வேண்டும்.

அமரநாத் ஜா என்ற கல்வி நிபுணர், இந்தியால் தமிழ் வளர்ச்சி குன்றும் என நம்மில் பெரும்பாலோர் கொண்டுள்ள முடிந்த முடிவிற்கு, ஐயமென பெயர் சூட்டி, அதைப் போக்க இந்தி மொழியைச் சொந்த மொழியாகக் கொண்டிருப்பவர் தமிழ் கற்கவேண்டும் என 'பஞ்ச தந்திரம்' போதிக்கிருர். கல்வி அமைச்சரான கனம் சுப்பிரமணியமும் மார்வாரிகள் கூட்டமொன்றில் அதையே கழன்றுள்ளார்.

இந்தி மொழியினர் தமிழ் கற்றுக்கொள்ள ஒப்புவரா — முன்வருவரா என்பது ஒரு பக்கம் கிடக்க, அவர்கள் நம் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்கும், இந்தி மொழி ஆதிக்கம் பரவினுல் தமிழ் சீரழியும் என்ற உண்மைக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை முதற்கண் ஆராய்வோம்.

இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் நமது தமிழைக் கற்றுக் கொள்வதினுல், இந்தி ஆதிக்கத்தால் தமிழுக்கு ஏற்பட இருக்கும் சீர்குலைவை தடுத்துவிட முடியாது. அதனுல், தமிழுக்குப் புதிய வளர்ச்சி ஏற்பட்டுவிட்டதாகக் கருதவும் முடியாது. இந்தி வெறியர்கள் தமிழ் கற்றுக் கொள்ள முனைவதினுல், இந்தியாவில் தமிழ் குன்றும் எனும் உண்மையில் நாம் கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிக் கொள்வதற்கு இடமுமில்லை — அவசியமுமில்லை.

எனவே, அவர்கள் பேச்சில் பொருத்தமில்லை. இந்திமொழியினரும் தமிழ் கற்றுக்கொள்ளும் பொழுது, நம்மவர் இந்தியைக் கற்றுக் கொள்வதற்கென்ன என்று நம்மவரை நோக்கிக் கேட்பதற்கும், தமிழ் மொழியை அழித்து இந்திக்கு ஏற்றம்தேட வேண்டுமென்பதல்ல இந்திவெறியர்களின் உள்ளக்கிடக்கை என்பதை நம்மவர் நம்பி ஏமாறச் செய்யவும் பேசப்படும் பித்தலாட்டப் பேச்சே அது என்பதை நம்மவர் மறந்துவிடக் கூடாது.

குறிப்பிட்ட ஒரு மொழியை கற்றுக்கொள்வது என்பது, தினசரி ஒருவர் வாழ்க்கையில் ஏற்படுகின்ற தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதில் எழுகிற இன்றியமையாமையைப் பொறுத்துள்ளது. இதற்கான வேறு பொதுவான காரணங்களும் உண்டு.

முதல் முதலாக ஆங்கிலம் கற்பதற்கு, அரசியலார் பதவி கிடைக்கும் என்ற உள்ளெண்ணம்தான் நம்மவருக்குக் குறிப்பான காரணமாக இருந்தது. ஆங்கிலம் கற்ருல்தான் வழக்கறிஞராகி வாழ்க்கை நடத்தலாம் என்ற அவா ஒவ்வொருவரையும் ஆங்கிலம் கற்கத் தூண்டிற்று. மற்ற எல்லாத் துறைகளுக்கும் ஆங்கிலம் இன்றியமையாதத் தேவையாக இருந்ததால், ஆங்கில மோகம் நம்மில் பலரை ஆட்கொண்டது. அதே நிலையில்தான், இன்று, இந்தி வைக்கப்பட்டிருக்கிறது.

வாழ்க்கையில் ஏற்படுகிற நடைமுறை கட்டாயத்தின் காரணமாக, மலேயா செல்லும் நம்மவர் பலப் பல மலேயா சொற்களை சில நாட்களுக்குள் கற்றுக் கொள்ளுகின்றனர். அதுபோலத்தான், பர்மிய மொழியையும், சிங்கள மொழியையும் ஆங்காங்கே சென்றுள்ள தமிழர் உள்ளிட்ட பிற மொழியினர், கற்றுக்கொள்ளுகின்றனர்—கற்க முயலுகின்றனர்.

நமது நாட்டிலும் ஆங்கிலேயர் இல்லங்களிலும், தொழில் நிலையங்களிலும் பணிபுரியும் நம்மவர், பற்பல ஆங்கிலச் சொற்களை அரைகுறையாக உச்சரிக்கக் கற்றுக் கொள்ளுகின்றனர். இந்தக் கட்டாயக் கல்விப் பயிற்சியை நம்மில் பலர் கண்டுமிருக்கிறோம்.

இதுபோல், நமது தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம்—தேவை, உத்திரப்பிரதேச இந்தி வெறியர்களுக்கு அறவே கிடையாது; இனி எழவேண்டிய அவசியமும் ஏற்பட நியாயமில்லை. எனவே, அவர்கள் தமிழ் கற்றுக் கொள்ள முன்வருவர் என எதிர்பார்ப்பதோ, அவர்களைத் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டுமெனக் கோருவதோ, அதற்கான கட்டாயம் இருக்கிறது என நம்புவதோ, கூடாது—நடவாது—தேவையற்றது!

ஆனுல், தமிழ் நாட்டில், தமிழ் மக்களிடம் தொழில் செய்துவரும் மார்வாரி—குஜராத்தி—சிந்தி—மற்ற வடநாட்டினர்—அனைவருக்கும் தமிழ் தெரிந்திருக்கவேண்டிய கட்டாயமிருக்கிறது — தேவையுமிருக்கிறது. அந்தத் தேவையின் காரணமாக அவர்களில் சிலர் 'அங்காடித் தமிழ்' பேசத் தெரிந்துள்ளார்கள். ஆனுல் பலருக்கோ, அந்த 'அங்காடித் தமிழ்' கூடத் தெரியாது. கட்டாயமிருந்துங்கூட, அவர்களிடம் 'அங்காடித் தமிழ்' கற்க வேண்டுமென்ற ஆசை அரும்பவில்லை.

சென்னை மாநிலத்தில் உள்ள நாற்பதினுயிரம் மார்வாடிகளும் குஜராத்திகளும், ஆங்கிலேயர் வீட்டில் வேலை செய்யும்—செய்துவரும் நம்மவர் போன்ற 'எடுபிடி' வேலையில் ஈடுபட்டுக் கிடப்பவர்கள் அல்ல. அவர்களுக்கு மாருக, நித்தியப்படி 'கையேடு பேரேடு' வைத்துக் கொண்டு ஒழுங்காகக் கணக்கு வைத்து நடத்தப்பெறும் பெரும் பெரும் தொழில் நடத்திவருபவர்கள். அவர்களுக்குத் தேவைப்படும் தமிழ் அறிவு, 'அங்காடித் தமிழ்' அளவைக் காட்டிலும் கூடுதலான தமிழ் அறிவாகும். எனவே, அவர்கள் அனைவரும் கண்டிப்பாக தமிழ் மொழியை முறையாகக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்திலிருக்கிருர்கள். அவர்களில் முதியவர்கள் தமிழ் கற்க விரும்பவில்லையானுலும், பள்ளிப் பருவம் கொண்ட இளைஞர்களைத் தமிழ் கற்றுக்கொள்ளச் செய்வது, அவர்களின் நீங்காக் கடமையாகிறது. ஆனுல், அவர்கள் தமிழ் கற்க முயற்சிப்பதில்லை, அவர்கள் தமிழ் மொழியிலும் கணக்கு வைப்பது கிடையாது. குஜராத்தியிலோ, மார்வாரியிலோ கணக்கு எழுதுகிருர்கள். அப்படித்தான் எழுதுவோம். அதை அனுமதிக்க வேண்டும் என கல்வி அமைச்சரை நேரில் கண்டும்-மனுக் கொடுத்தும் மன்ருடுகின்றனர்.

தமிழ் கற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்களும், தமிழ் நாட்டினருடன் தொழில் துறையில் பழகுகிறவர்களும், தமிழரை நம்பிக்கிடப்பவர்களுமான இங்குள்ள மார்வாடி—குஜராத்திகளே தமிழ் கற்க விருப்பமில்லாது — அதுவும் கற்க வேண்டிய கட்டாயமிருந்தும்கூட கற்க மனமில்லாது இருக்கும்பொழுது, உத்திரபிரதேசத்திலும் மற்ற வடநாட்டு இந்தி மொழி வழங்கும் பகுதியிலும் உள்ள இந்தி வெறியர்கள் தமிழ் கற்க முன்வருவர் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது? தமிழ் கற்றுத்தீரவேண்டிய தேவைதான் அவர்களுக்கு என்ன இருக்கிறது? அவர்களைத் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டும் எனச் சிலர் கூறுவதில் பொருத்தந்தான் உள்ளதா?

தமிழர்களை இந்தி வலையில் வீழ்த்தவும், தமிழர்களை ஏமாற்றவுமே, இப்படி சிலர் மாய்மாலக் கண்ணீர் வடித்து வருகின்றனர் என்பதுதான் உண்மை. இந்த உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. இப்பொழுது — இந்த அளவோடு இதைநிறுத்துகிறோம்.

# ஆசிரியர்களை நலிவுறச் செய்யும் சரித்திர கால அநீதி!

## வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாவிடில் கல்வி முன்னேற்றம் ஏற்படாது!

### இந்திய ஆசிரியர்கள் நிலைபற்றி நிபுணர்குழு அறிக்கை

"சரித்திர காலந்தொட்டு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி ஒழிய வேண்டும்; அவர்களது பொருளாதார நிலை உயர உடனடித் திட்டங்கள் அவசியமாக நிறைவேற்றப்பட வேண்டும்,"

என்று, இந்திய சர்க்கார், அமெரிக்க போர்டு தர்மகர்த்தா நிலையம் ஆகியவற்றின் கல்வி நிபுணர்கள் குழுவின் கூட்டறிக்கை கூறுகிறது.

இக்குழுவில், இந்தியா, அமெரிக்கா, பிரிட்டிஷ், ஸ்காண்டிநேவியா ஆகிய நாடுகளின் கல்வி நிபுணர்கள் உள்ளனர். அவர்கள், இந்திய சர்க்காருக்குச் செய்துள்ள சிபாரிசுகளில் மேலும் கூறுவதாவது :—

"ஆசிரியர்களின் பொருளாதார நிலைய உயர்த்துவதே தங்கள் குறிக்கோள் என்று இந்திய சர்க்கார் அறிவிக்க வேண்டும்; அதன்படி காரியமாற்ற வேண்டும்; ஆசிரியர்கள் போன்று பொறுப்பான பதவிகளில் உள்ளவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் அவர்களுக்கும் கிடைக்கும் என உறுதியளிக்க வேண்டும்.

"போதுமானபொருளாதார சூழ்நிலை இல்லை என்பதால், உடனடியாக ஆசிரியர்களின் நிலை உயர எல்லா நடவடிக்கைகளும் எடுக்க முடியாது என்பதை குழுவினர் உணர்ந்திருக்கிருர்கள்; ஆனுல் இந்தச் சரித்திரகால அநீதியைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம் என்ற சர்க்காரின் அறிவிப்பு, ஆசிரியர்களுக்கு எவ்வளவோ ஊக்கத்தையளிக்கும்."

'குரு' என்று ஆசிரியர்கள் அழைக்கப்படுவது குறித்து, அக்குழுவின் அறிக்கை கூறுவதாவது :—

"குரு என்று ஆசிரியர்கள் பெருமையாகப் பேசப்படுவது, அவர்கள் நடத்தப்படும் விதத்தைப் பார்க்கும் போது, பொருந்தமானதாகத் தெரியவில்லை; அதுமட்டுமல்ல; எல்லா ஆசிரியர்களும், 'குரு' என்னும் தியாக நினைவிலேயே பணியாற்றுவார்கள் என்று எண்ண முடியாது."

"இந்தியாவில் உள்ள ஆசிரியர்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் கீழ் நிலையில் உள்ளது; அவர்கள் நிலை, போதுமான அளவு உயர்த்தப்பட்டால் ஒழிய, கல்வியில், முன்னேற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கைக்கு இடமேயில்லை."

### சீட்டோ: காமன்ஸ் சபை ஒப்புக்கொண்டது

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கீழ் சபையான காமன்ஸ் சபை, இந்தோ - சீன பற்றிய ஜினீவா ஒப்பந்தத்தையும், 'சீட்டோ' ஒப்பந்தத்தையும் வாக்கெடுப்பின்றி ஒப்புக்கொண்டது.

# உங்களுக்குத் தெரியுமா?

★

**கேள்விகள் :**

1. இந்தியாவில் 1953—54-ல், ஒலிபரப்பு அபிவிருத்திக்காக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?
   (அ) நாளொன்றுக்கு ரூ. 18,000 வீதம் ;
   (ஆ) வாரத்துக்கு ரூ. 18,000 வீதம் ;
   (இ) மாதத்துக்கு ரூ. 18,000 வீதம்.

2. கோசி அபிவிருத்தித் திட்டத்தின் முதல் கட்டத்தில் இடம் பெற்றுள்ள வேலைத் திட்டங்கள் எவை ?
   (அ) அனுமான் நகரில் ஒரு அணைக்கட்டு ;
   (ஆ) அனுமான் நகரிலிருந்து நதியின் இருபுறங்களிலும் சுமார் 70 மைல் தூரம் வரை கரை அமைப்பு வேலைகள் ;
   (இ) சுமார் 16 லட்சம் ஏகரா நிலத்துக்குப் பாசன வசதி அளிக்கும் கால்வாய்த் திட்டம்.

3. படித்தவர்களிடையே வேலையின்மையைப் போக்குவதற்காக மத்திய சர்க்கார் சென்ற ஏழு மாத காலத்தில் எத்தனை பேருக்கு வேலையளித்துள்ளனர் ?
   (அ) 12,000 கிராமப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் ;
   (ஆ) 20,000 கிராமப்பள்ளிக்கூட ஆசிரியர்கள் ;
   (இ) 23,000 கிராமப்பள்ளிக்கூட ஆசிரியர்கள்.

4. பொருள் உற்பத்தியையும், இயந்திர உற்பத்தியையும் பெருக்கும் பொருட்டுப் புதிய தொழில்களைத் துவங்குவதற்கும், பழைய தொழில்களை விஸ்தரிப்பதற்கும் உதவி புரிவதற்கான தொழில் அபிவிருத்தி கார்ப்பொரேஷன் எப்போது நிறுவப்படும் ?
   (அ) 1954 டிசம்பரில் ;
   (ஆ) 1955 மார்ச்சில் ;
   (இ) 1956 ஜனவரியில்.

5. இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள தேசீய ஆராய்ச்சிக்கூடங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?
   (அ) 5 ;
   (ஆ) 11 ;
   (இ) 17.

**விடைகள் :**

1. (அ) ; 2. எல்லா விடைகளும் சரி' 3. (இ); 4. எல்லா விடைகளும் தவறானவை (இந்த நிறுவனம் 1954 அக்டோபர் மாதம் நிறுவப்பட்டது); 5. (ஆ).

# கொச்சி மக்களை திருப்திபடுத்த.....

## மந்திரி பதவி!

திரு—கொச்சி மாநிலத்தில் இப்போதுள்ள பி.-சோ. மந்திரி சபை மீது கொச்சி மக்கள் வெறுப்புக் கொண்டிருக்கின்றனர் என்றும், கொச்சி மக்களின் கோரிக்கைகள் என்ற தலைப்பில் 34 அம்சங்களைக் கொண்ட மனு ஒன்றை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளனர் என்றும் செய்தி ஏற்கனவே வெளியாகியுள்ளது.

அதுபற்றிக் கேட்கப்பட்ட போது, திரு—கொச்சி தொழிலாளர் இலாக்கா மந்திரி திரு. பி. கே. குஞ்சு கூறியதாவது :—

"கொச்சி மக்கள் கோரிக்கைகள், இன்னும் ஆலோசனை செய்யப்படுகிற நிலையிலேயே இருக்கின்றன ; மந்திரி சபையில் கொச்சிக்காரர்களுக்கும் இடம் தந்து மந்திரி சபையை விரிவாக்குவது பற்றியும் இன்னும் எவ்வித இறுதி முடிவும் மேற்கொள்ளப்படவில்லை ; முதன் மந்திரி பட்டம் தாணுப் பிள்ளை டெல்லியிலிருந்து திரும்பிய பிறகே அப்பிரச்சினையில் திட்டமான முடிவுகள் மேற்கொள்ளப்படும்," என்றார்.

# ஆங்கில மொழிப் பயிற்சி அவசியம்

## கல்வி சீர்திருத்தம் செய்ய ஆசிரியர்களே தகுதியுடையவர்கள்

## மத போதனையை மடங்கள் செய்யவேண்டும்; பள்ளிக்கூடங்கள் அல்ல!

*ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பி. கோவிந்தசாமி*

சிதம்பரம்—

"ஆங்கில மொழிக் கல்வி மிகவும் அவசியமானது ; தேவையானது. தொடர்ந்து ஆங்கிலம் தகுந்த முறையில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும்."

"இப்போது கல்வி சீர்திருத்தம் பற்றி பேசப்படுகிறது ; கல்வியில் செய்யப்படும் எத்தகைய சீர்திருத்தமும், ஆசிரியர்களின் முடிவுக்கே விட்டுவிடப்பட வேண்டும். ஏனெனில், அவர்கள் தான் இந்த பிரச்சினையில், தகுந்த வழிகாட்டிகளாவர்,"

—என்று தென்னாற்காடு மாவட்ட ஆசிரியர் சங்க வருடாந்திரக் கூட்டத்திற்கு தலைமை ஏற்றுப் பேசுகையில் தோழர் பி. கோவிந்தசாமி குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது :—

"மத போதனையை, மடங்களிடமும், அதை ஒத்த நிறுவனங்களிடமும் தரவேண்டுமேயல்லாது, பள்ளிகளில் மதபோதனை கூடாது. மதபோதனை செய்வதில், மடங்களே நல்ல திறம்பட்ட வேலைகள் செய்து வருகின்றன.

"பள்ளிகளில் மதபோதனை செய்வது தீய விளைவுகளையே உண்டுபண்ணுவதாயிருக்கும்.

"ஏனெனில், பள்ளிகளில் பல வகையான மதங்களையும் வகுப்புகளையும் சார்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் இருக்கிறார்கள்.

"பள்ளிகளில் மாணவர்களுக்கு, குறள் கட்டாயமாக போதிப்பது விரும்பத்தக்கது—தேவையானது."

# சோவியத் விருந்து

## அமெரிக்கர் கலந்துகொள்ளவில்லை

சோவியத் புரட்சிதின விழாவையொட்டி, ஐ. நா. சபையில் ரஷ்யாவின் தூதுவராகவுள்ள விஷின்ஸ்கி அளித்த விருந்தொன்றில் அமெரிக்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை என்று தெரிகிறது.

அமெரிக்க விமானமொன்றை ரஷ்யர்கள் சுட்டு வீழ்த்தியதைக் கண்டிக்கும் பொருட்டே அமெரிக்கப் பிரதிநிதிகள் இந்த விருந்தில் கலந்துகொள்வதில்லை என்று முடிவு செய்தார்களாம்.

விருந்து நடைபெற்ற கட்டடத்திற்கு எதிரில், 'கம்யூனிஸ்டு கொலைகாரர்கள் ஒழிக,' என்று எழுதப்பட்ட அட்டைகள் வைக்கப்பட்டிருந்தனவாம்.

# வளரும் கடன் தொகை

இந்தியாவிற்கு அகில உலக பாங்கியிலிருந்து சுமார் 2½ கோடி டாலர் புதியதாகக் கடன் கிடைக்குமென்று பாங்கி அதிகாரி ஒருவர் கூறினார்.

அபிவிருத்திக்காக ஏற்பட்டுள்ள அந்த அகில உலக பாங்கியின் உபதலைவரான ராபர்ட் கார்னர் என்பவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இத்தொகை, பம்பாய் அருகில் உள்ள ட்ராம்பேயின் மின்சார விநியோகத்தை அதிகரிக்கவும், தொழில் கடனுக்காகவும் பயன்படுத்தப்படும் எனத் தெரிகிறது.

இத்தொகையையும் சேர்த்தால், இந்தியா இதுவரை இந்த சர்வதேச அபிவிருத்தி பாங்கியில் வாங்கியுள்ள கடன் மொத்தம் 12½ கோடி டாலராகும்.

# பத்திரிகை காரியாலயத்தின் மீது தொழிலாளர்கள் படையெடுப்பு!

## தொழிலாளர்களைக் கண்டித்து எழுதியதாம்!

ஆஸ்திரேலியாவின் முக்கிய பத்திரிகைகளில் ஒன்றான 'டெய்லி டெலிகிராப்' என்னும் இதழின் காரியாலயத்தை, 1,500-க்கு மேற்பட்ட துறைமுகத் தொழிலாளர்கள் சூழ்ந்துகொண்டு தாக்கினார்கள் என்று தெரிகிறது.

துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தைக் கண்டித்து இப்பத்திரிகை எழுதியதால் ஆத்திரம் கொண்ட தொழிலாளிகள், பத்திரிகாலயத்தைத் தாக்கினார்கள் என்று தெரிகிறது.

மெல்போர்னில், பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில், தொழிலாளர் கழகச் செயலாளரான ஜேம்ஸ் ஹீலே என்பவர், 'இந்த வேலை நிறுத்தம் பார்லிமெண்டிற்கு எதிராகச் செய்யப்படுவது அல்ல,' என்று கூறினார்.

ஆஸ்திரேலியப் பிரதமர் வாஞெலியில் பேசுகையில், வேலைக்குத் திரும்புமாறு தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டதுடன், 'தொழிலாளர் கழகம் கம்யூனிஸ்டுகளின் வலையில் சிக்கிவிட்டதுடன், அது பாராளுமன்றத்திற்கு ஒரு சவாலாக இருக்கிறது,' என்றும் கூறினார்.

# குற்றத்தை ஒப்புக் கொள்கிறார்!

எகிப்து பிரதமர் நாசரைக் கொலை செய்ய முயன்றதாகத் தொடரப்பட்ட வழக்கொன்றில், முகமது லதீப் என்பவர், தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது. (எகிப்து முஸ்லீம் சகோதர சங்கத்தைச் சேர்ந்த இவர், சமீபத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பிரதமர் நாசர் பேசிக்கொண்டிருக்கையில், அவரைச் சுட்டுக் கொல்ல முயற்சித்து தோல்வி கண்டது.) நினைவிலிருக்கலாம்

# 40 உயர்நிலைப் பள்ளிகள்

## 'பல நோக்கு' பள்ளிகளாக மாற்றப்படுகின்றன

அடுத்த ஆண்டு இறுதிக்குள் சென்னை மாநிலத்தில் 40 உயர்நிலைப் பள்ளிகள், 'பலநோக்கு' பள்ளிகளாக மாற்றப்படும் என்று சென்னை மாநில கல்வி இலாகா டைரக்டர் என். டி. சுந்தரவடிவேல் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டில் முடிவுறவிருக்கும் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்துக்குள், நாடு முழுவதிலும் 500 உயர்நிலைப் பள்ளிகள் 'பல நோக்குப் பள்ளி'களாக மாற்றப்படும் என்றும், அடுத்த இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் 2000 உயர்நிலைப் பள்ளிகள் இம்மாதிரிப் பள்ளிகளாக மாற்றப்படுமென்றும், அதன்படி, சென்னை மாநிலத்தில் மட்டும் 160 பள்ளிகள் 'பலநோக்கு' பள்ளிகளாக மாறும் எனவும் கூறியுள்ளார்.

டில்லியில் நடைபெற்ற மாநில கல்வி இலாகா தலைவர்கள், செயலாளர்களின் மாநாட்டில், ஒவ்வொரு ரெவினியூ மாவட்டத்திலும் குறைந்த பட்சம் ஒரு 'பலநோக்கு' பள்ளிக்கூடமாவது இருக்கவேண்டுமென்று செய்துகொண்ட சிபாரிசுக் கிணங்க, நாட்டிலுள்ள 330 ரெவின்யூ மாவட்டங்களிலுமாக 330 பள்ளிகளும், மீதமுள்ள 170 பள்ளிகளும் சலுகை அடிப்படையில் நிறுவப்படுமெனவும், இதன்படி சென்னையில் 40 உயர்நிலைப் பள்ளிகள் மாற்றியமைக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

தற்போது நாடு முழுமையிலுமுள்ள ஆரம்பப் பள்ளிகளில் 3-ல் ஒரு பாகமும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் 50 சதவிகிதமும் ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்பட வேண்டுமென அந்த மாநாடு யோசனை கூறியுள்ளது.

ஏழு ஆண்டு இடைத்தரப் பள்ளிப் படிப்புத் திட்டத்தை, மாநில சர்க்கார்களே மேற்கொண்டு முடிவு செய்துகொள்ள வேண்டுமென்றும் அம்மாநாடு அபிப்பிராயப்பட்டதாம்.

# இந்திய நிலப்பரப்பை சீனு அபகரிக்கும்!

## ஆங்கில நாட்டவரின் கருத்து!

ஜார் கால ரஷ்யாவைப் போலவே, ஏகாதிபத்திய சீனாவும் நாட்டை விஸ்தரிக்கும் எண்ணம் கொண்டது; இந்தப் பண்பு இப்போது, சோவியத் ரஷ்யாவிலும், கம்யூனிஸ்டு சீனாவிலும் தொடர்ந்து நீடிக்கிறது ; திபேத்தை சீனு அபகரித்துக் கொண்டிருப்பதே இதற்குச் சான்றாகும்,"

—என்று லண்டன் 'டைம்ஸ்' என்ற இதழில் 'சீனாவும் இந்தியாவும்' என்ற தலைப்பில் எழுதிய கடிதம் ஒன்றில் சர். கரோய் என்பவர் கூறியுள்ளார்.

இவர் வடமேற்கு எல்லை மாகாணத்தின் முன்னாள் கவர்னர் ஆவார்.

அவர் மேலும் கூறுவதாவது :—

"இமயமலைப் பகுதியிலுள்ள அசாமில், பிரம்மபுத்திராவின் சமவெளிக்கு 100 மைலுக்கு அப்பால் 200 மைல் நீளமுள்ள பகுதியொன்று 1913-ம் ஆண்டில் நடைபெற்ற ஒப்பந்தம் ஒன்றின்படி, இந்தியாவுக்கும்—திபேத்திற்கும் எல்லை என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

'மக்மாகன் லைன்' என்னும் இந்த எல்லை, பூடானுக்குக் கிழக்கே இமயமலையின் விளிம்பில் செல்கிறது.

1913-ல் நடைபெற்ற ஒப்பந்தத்தை, சீனு ஒப்புக்கொள்ளவில்லை.

பின்னர், சீனு, தனது படங்களில், அசாம் குன்றுகளின் ஓரத்தில் தனது எல்லை செல்வதாகக் காட்டியுள்ளது.

திபேத்தை, சீனு, தன்னுடைய தாக்கிக் கொண்டதால் நிலைமை மாறிவிட்டதென்றும் இதன் மூலம் 250/100 மைல் சுற்றளவுள்ள இந்தியப் பகுதியை சீனு கோருமென்றும், அது உலகப் பிரச்சினையாக மாறுமென்றும் கூறலாம்.

இதற்கான பிரச்சினை எழுகின்ற போது, பண்டித நேருவோ, அல்லது அவருக்குப் பின்னர் பதவிக்கு வருகிறவர்களோ, காமன்வெல்த்துடன் இந்தியா கொண்டிருக்கும் தொடர்பை அறுத்துக்கொள்ள முயற்சிக்க மாட்டார்கள் என்பது உறுதியாகும்.

# உற்பத்தி அதிகரிக்க 'உரம்' அதிகமாக உபயோகிக்க வேண்டும்

## உர உற்பத்திக்கு இன்னும் சில 'சிந்திரி'கள் உருவாகும்!

*மத்திய அரசாங்க உணவிலாகா காரியதரிசி அறிவிப்பு*

**"உற்பத்தி சீக்கிரமாகவும், மலிவாகவும் அதிகமாக்கப்படுவதற்கு, அதிகமான அளவு விவசாயத்தில் உரம் உபயோகிக்கப்படவேண்டும் ; அதிலும் குறிப்பாக, 'நைட்ரஜன்' உரம் உபயோகிக்கவேண்டும்"**

என்று மத்திய அரசாங்க உணவு, விவசாய இலாகா செயலாளர் எச். எம். படேல் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் கூறியதாவது :—

"'அம்மோனியம்சல்பேட்' உரம் உபயோகிப்பது இன்று மிகவும் அதிகரித்துள்ளது. சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்ததைப் போன்று 5 மடங்கு அதிகமாக இப்போது உரம் உபயோகிக்கப்படுகிறது. முன்பு ஒரு லட்சம் டன் அளவிற்குச் சற்றுக்குறைவாகவும், சுதந்திரத்திற்குப் பிறகு 5 லட்சம் டன் அளவிற்குச் சற்று அதிகமாகவும் உரம் உபயோகிக்கப்படுகிறது.

சிந்திரி உர உற்பத்தித் தொழிற்சாலை நாள் முழுதும் வேலை செய்கிறது. அங்கு உற்பத்தியாகும் ஒவ்வொரு டன் உரமும் விற்பனையாகிறது.

உரம் நாளுக்கு நாள் அதிகமாகத் தேவைப்பட்டு வருகிறது. அதனால் நாமும் இன்னும் இரண்டொரு 'சிந்திரி' தொழிற்சாலைகளை தோற்றுவிக்கப்போகிறோம். அதற்கிடையில், நமக்குத் தேவையான 'அம்மோனியம் சல்பேட்' உரம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது."

---

இந்தியாவில் சேவிங்ஸ் பாங்கிக் கணக்கு நிலுவை 1953—54-ல் 217·77 கோடி ரூபாயிலிருந்து, 232. கோடி ரூபாயாக அதிகரித்திருக்கிறது.

## வேண்டுகோள்

"தமிழ் நாடு முக்குலத்தோர் மாணவர் கழகத் தலைவர் தோழர் பி. வீரபத்திரன், 26-10-54 அன்று, ஆலக்குடி ரயில் வண்டி நிலைய பிளாட்பாரத்தில் பேசிக் கொண்டிருக்கையில், திடீரென மயக்கமுற்று இரும்புத் தண்டவாளத்தில் மோதி படுகாயம் ஏற்பட்டதின் காரணமாக தஞ்சை பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவருக்குத் தேவைப்படும் இஞ்சக்ஷன் முதலியவற்றிற்கு முக்குலத்தோர் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு அவரது முகவரிக்கு (பி. வீரபத்திர தேவர், படுக்கை எண் 11, வார்டு எண் எம். எஸ். ஏ. 3, சர்க்கார் பெரிய ஆஸ்பத்திரி, தஞ்சாவூர்.) அனுப்பி உதவக் கேட்டுக்கொள்கிறேன்," என த. நா. மு. மாணவர் கழகப் பொதுச் செயலாளர் மீனு. ராமதாசன் வேண்டிக்கொள்கிறார்.

# விருதுநகர் கல்லூரி மாணவர்கள் பட்டினிப் போர்!

சேந்திக்குமார நாடார் கல்லூரி மாணவர் விடுதியைச் சேர்ந்த **435** கல்லூரி மாணவர்கள், தங்கள் குறைகளை கல்லூரி நிர்வாகிகள் கவனிக்கவில்லை எனக் காரணம் காட்டி, பட்டினிப் போர் துவங்கியுள்ளனர் எனத் தெரிகிறது.

உணவு நிர்வாகி, தங்களிடம் மரியாதையுடன் பழகவில்லை என்பதால் அவரை விலக்கவும், தரப்பட்டிருக்கிற அறைகள் நிறைய மாணவர்கள் தங்க வசதியாயிருக்கும் பொருட்டு பெரிதாக்கவும், சாப்பாட்டு அறை வசதிக் குறைவாயிருப்பதால் அதை பெரிது படுத்தவும் மாணவர்கள் கோரினர்.

இந்தக் கோரிக்கைகளை கல்லூரி அதிகாரிகள் நிறைவேற்ருததினுல் மாணவர்கள் பட்டினிப் போர் துவங்கியுள்ளதுடன், விருதுநகர் வீதி வழியாகத் தங்கள் கோரிக்கைகளை கோஷங்களாக முழங்கிக் கொண்டும் சென்றனர் எனத் தெரிகிறது.

தங்களது கோரிக்கைகளையும், தாங்கள் துவங்கியுள்ள பட்டினிப் போரையும், முதன் மந்திரி காமராசருக்கும், சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் லட்சுமணசுவாமிக்கும் தந்தி மூலம் மாணவர்கள் தெரிவித்திருப்பதாயும் சொல்லப்படுகிறது.

## ம. பி. முதல் மந்திரி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதிகளான சவுத்திரியும், முதோல்கார் அவர்களும், சர்க்கார் அதிகாரிகள்மீது வழக்குத் தொடருவதற்கு, அவர்களை நியமிப்பவர்களின் அனுமதி அவசியமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியதும், அரசியல் சட்டத்திற்கு விரி பொருள் காணவேண்டியதுமான ஒரு நிலைமை, இவ்வழக்கில் இருக்கின்ற காரணத்தால், இந்திய நீதிமன்றத்தில் வழக்காட அனுமதி தருகிறேம் என, மந்திரி சுக்லா மீது மேற்கொண்டு வழக்கெடுக்க அப்துல் ரெகமான் பரூக்கு உரிமை தந்தனர்.

இதுபற்றி ஏற்கனவே மக்கள் சோஷலிஸ்டு கட்சியினர், குழுவை நியமித்து ஆராய வேண்டுமென முயற்சித்ததும், அதற்காக இத்திங்கள் 7-ந் தேதியை குழு நியமன கோரிக்கை தினமாகக் கொண்டாட அக்கட்சி அறிவித்திருந்ததும், அதற்கான அவசியம் எதுவும் கிடையாது என, பண்டித நேருவே மறுத்துக் கூறி இருந்ததும் கருதத்தக்கது.

மக்கள் சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர் குருபாதசாமி, சுக்லா மீது சாட்டப்படும் குற்றங்களை மெய்ப்பிப்பதற்கான எழுத்து மூலசான்றுகள் பல இருப்பதாக பத்திரிகை நிருபர்களிடம் கூறி இருப்பதும் நினைவு கொள்ளத்தக்கது.

டாக்டர் என். பி. கரே அவர்கள், சுக்லாமீது வழக்குத் தொடுக்க அவர் கவர்னரின் அனுமதி கோரியிருப்பதாகவும், அது கிடைக்காவிட்டால், குடியரசு தலைவரின் அனுமதியைக் கோரப்போவதாகவும் குறிப்பிட்டும் உள்ளார்.

## பட்டத்திற்குப் பாடம்!

பி. சோ. கட்சியின் மத்திய நிர்வாகக் குழுவிலிருந்து பலேஷ்வர் தயாளு இராஜினுமா செய்துவிட்டாரெனத் தெரிய வருகிறது.

திரு-கொச்சி துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து அதை ஊர்ஜிதம் செய்யவே, அவர் குழுவிலிருந்து விலகியுள்ளார் என்று கூறப்படுகிறது.

ஜனநாயக சோஷலிச அரசாங்கத்தை நிலைநிறுத்தப் பாடுபடும் ஒரு கட்சியினர், கொள்கையற்ற பலாத்காரச் செயல்களில் ஈடுபடக்கூடாது என்று அவர் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

## திரு-தமிழர் அறப்போர்

### ஜாமீன் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன

சென்ற ஆகஸ்டு திங்கள் 11-ந் தேதி, திரு—த. நா. காங்கிரஸ் நடத்திய திரு—தமிழக இணைப்புப் போராட்டத்தின் காரணமாகத் தொடரப்பட்ட வழக்கின் எதிரிகளான ஏ. குஞ்சன் நாடார், மற்றும் 3 எம். எல். ஏ.,-க்கள் உள்ளிட்ட ஏழு பேரின் ஜாமீன் விடுதலை மனுவை, திரு-கொச்சி உயர்நீதி மன்ற நீதிபதி கே. எஸ். கோவிந்த பிள்ளை நிராகரித்து விட்டிருக்கிருர்.

சர்க்காரை கவிழ்க்கச் சதி, கொள்ளையடித்தல், போலீஸ் ஊழியர்களைக் கொலைசெய்தல், திருட்டு முதலிய குற்றங்களைச் செய்ய மக்களைத் தூண்டியதாகவும், பொது பந்தோபஸ்து நடவடிக்கை சட்டத்தின் 31–(1) (ஏ) பிரிவு, தந்திச் சட்டம் 25-வது பிரிவு ஆகியவற்றின் கீழும் அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

பிரெஞ்சு சட்ட சபையில், தபால் வரவு—செலவுத் திட்ட விவாத முடிவில், பிரதமர் மெண்டே பிரான்சின் மீது நம்பிக்கைத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அதில் அவர் வெற்றியடைந்தார்.

## மக்களின் அறிவு....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

**காலத் தமிழ் வாழ்க்கையைப் பெற முனைந்துவிட்டார்கள்,' என்று கூறமாட்டேன்.**

மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக, சிறிது சிறிதாக, மெள்ள மெள்ள—விடுதலை ஆர்வத்தை — அறிவுத் தெளிவைப் பெற்று வருகிருர்கள்; அதனுல், 'எல்லா மக்களும் பூரணமாக அறிவுத் தெளிவு பெற்றுவிட்டனர்,' எனவும் கூறமாட்டேன்!

சிலர், சொன்னவுடன் புரிந்து கொண்டார்கள்; சிலர், "ஆமாம்; நியாயம்தானே; 'பாலைக் கறந்து, பச்சிளம் குழவியின் பசிக்குத் தராமல், பாழும் குழவிக்கல்லுக்குக் குளிப்பாட்டுகிருர்களே,' என்று, இவர்கள் கேட்பதில் என்ன தவறு?" என்று எண்ணிப் பார்த்து, பிறகு, 'நாம் சொன்னது சரிதான்,' என்ருர்கள்!

இன்னும் சிலர், "இவர்கள் சொல்வதெல்லாம் சரிதான்; ஆனுல், கடவுளை, 'குழவிக் கல்' என்று பேசினுர்களே, இது நியாயமா? இப்படிப் பேசலாமா?" என்று பேசுபவர்களும் இருப்பர்.

இப்படிச் சிறிது சிறிதாக, கொஞ்சம் கொஞ்சமாக, மக்கள், அறிவுத் தெளிவைப் பெற்று, 'விடுதலை' ஆர்வம் கொண்டவர்களாகி வருகிருர்கள்.

ஒரு நாடு விடுதலை பெறுகிறது என்பதற்கான அடையாளமாக, அந்த நாட்டு மக்கள், பழமைப் பிடியிலிருந்து விடுபட்டு, அறிவுத் தெளிவு பெறுவதையும் மேலை நாட்டினர் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதை நமக்கு மேலை நாட்டு வரலாறுகள் இயம்புகின்றன.

(பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்களின் சொற்பொழிவு முடியவில்லை. தொடர்ந்து நாளை வெளிவரும்.)

# வரலாறு காணுதது! வர்ணிக்க வொண்ணுதது!

## அயல் நாட்டுத் தூதுவர்களுடன் சோவியத் தலைவர்கள் உரையாடல்

### விருந்தோம்பி, மதுவருந்தி மகிழ்ந்தனர்!

சோவியத் ரஷ்யாவின் சரித்திரத்திலேயே நடைபெருத ஓர் வைபவம் மாஸ்கோவில் நடைபெற்றிருக்கிறது. இவ்வைபவம் உண்மையிலேயே மிக அசாதாரணமாக இருந்தது. சுமார் 500 ஆண்டுகட்குமுன்னர், ஜார் வம்சத்து மன்னர்கள், பிறநாட்டுத் தூதுவர்களுக்கு வரவேற்பளித்துப் பாராட்டுதல்கள் நடத்திய அதே மண்டபத்தில்தான் இவ்வைபவமும் நடைபெற்றதென்பது குறிப்பிடத்தக்கது. சோவியத் பிரதமர் மாலன்கோவும், மற்ற உயர்தர அதிகாரிகளும் மேற்கத்திய நாடுகளின் பிரதிநிதிகள், ஏனைய நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் சேர்ந்திருந்து விருந்துண்டு, மகிழ்வுடன் சுமார் 3 மணி நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். ரஷ்ய பிரதமர் மாலன்கோவும், ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சியின் தலைமை செயலாளரான குருஷேவ்வும், மற்றுமுள்ள உயர் அதிகாரிகளும், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், யூகோஸ்லாவியா மற்றும் சில நாடுகளின் தூதுவர்களை அன்புடன் முகம் மலர வரவேற்று கை குலுக்கி, அவர்களுடன் ஒன்ருக இருந்து விருந்துண்டு, மதுவருந்தி, ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களும் பரிமாறிக் கொண்டனராம்!

ஒரு வட்டமான மேஜையைச் சுற்றிலும் அவர்கள் உட்கார்ந்து கொண்டு, அவர்களெல்லாரும் கேளிக்கையாக உரையாடிக் கொண்டிருந்தனராம்! மொழி பெயர்ப்போர் இல்லாமலேயே, இவர்கள், சிறிதுநேரம், ஜெர்மனி, ஆயுதபரிகரணம் பற்றி பேசினராம்!

மாலன்கோவும், குருஷெவ்வும் உற்சாகமாகக் காணப்பட்டனர். அவர்கள் இருவரும் விருந்தில் கலந்துகொண்ட ஒவ்வொருவரையும் சந்தித்து, அவர்களுடன் அளவளாவினர்.

இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறலாமென்று மேற்கத்திய நாட்டுத் தூதுவர்கள் நம்புகின்றனர்.

## டாக்டர் பதேமியின் தூக்குத் தண்டனை நிறைவேற்றம்!

### எண்ணெய்க் கம்பெனிகளை தேசிய மயமாக்கப் பாடுபட்டவர்

தெஹ்ரான், நவ. 10—

ஈரானின் முன்னுள் வெளிநாட்டிலாக்கா மந்திரியான உசேன் பதேமி, இன்று விடியற்காலை 'சாசர் பாரக்ஸ்' எனும் இடத்தில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

டாக்டர் பதேமிமீது ராஜத்துரோகம் முடியாட்சியைகவிழ்த்து கம்யூனிஸ்டு 'பாணி'யில் குடியரசமைக்க சதி செய்தல் ஆகிய குற்றங்கள் சுமத்தப்பட்டு, ராணுவ நீதி மன்றம் ஒன்றில் தூக்கு'தண்டனை விதிக்கப்பட்டார்.

தண்டனையை எதிர்த்து, ஈரான் மன்னரிடம், பதேமி செய்து கொண்ட இறுதி அப்பீலும் 'அவரது உயிரைக் காக்க இயலவில்லை.

மூன்ருண்டுகளுக்கு முன், டாக்டர் முசாதிக்கின் மந்திரி சபையில் பணியாற்றிய டாக்டர் பதேமி, ஆங்கிலோ ஈரானிய எண்ணைக் கம்பெனிகளை, தேசியமாக்குவதில் தீவிரமாகப் புணியாற்றினுர்.

**தி. மு. க. பொதுச்செயலாளர்**

## அண்ணுதுரை

### நிகழ்ச்சிகள்

★

**14—11—54:** திருப்பூர்: தி. மா. மு. கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

**15—11—54:** கோபிசெட்டிப் பாளையம்: காலை 9 மணிக்கு விவசாயிகள் மாநாடு;
மாலை: நகரமன்றம் வரவேற்பு;
இரவு: தி. மு. கழகச் சார்பில் பொதுக்கூட்டம்

**16—11—54:** காங்கயம்: மாலை 6 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் பொதுக்கூட்டம்

இந்நிகழ்ச்சிகளில் கோவைமாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும், தோழர் அ. பொன்னம்பலனுர் அவர்களும் கலந்துகொள்வார்கள்.

## கழகக் கூட்டங்கள்

★

**சிவகாசி**
சிவன் கோவில் முன்பு
**13-11-54** இரவு **7-30** மணிக்கு
பேசுவோர்:
என். வி. நடராசன்
ஏ. திராவிடமணி

★

**ஒரக்காட்பேட்டை**
தி. மு. கழக **5**-வது ஆண்டு விழா
சின்ன தெருவில்
**13-11-54** இரவு **7-30** மணிக்கு
தலைவர்: கே. வி. திருநாவுக்கரசு
பேசுவோர்:
சி. வி. எம். அண்ணுமலை
கே. வி. முருகேசன்
இரவு 10 மணிக்கு மேற்படி கழகத்தினரால் 'தியாக ஜோதி' என்ற நாடகம் நடத்தப்படும்.

★

**வேப்பம்பட்டி**
தி. மு. கழக ஆண்டு விழா
**13—11—54** சனி மாலை
பேசுபவர்:
கே. ஏ. கலையழகன்

வெளிவருகிறது
திருவிடம்
தி.மு.க. இலக்கிய மாத இதழ்
ஆசிரியர் அழகண்ணல்
ஏஜெண்டுகள் தேவை
விபரங்களுக்கு
நிர்வாகி- திருவிடம்
சென்னை-5

### காரைக்குடி மாணவத் தோழர்களுக்கு

7—11—54 மாலை 5 மணிக்கு காரைக்குடி பழைய டவுன் ஹாஸ்டலில் நடைபெற்ற மாணவர்கள் கூட்டமொன்றில், விரைவில் இங்கு திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் ஒன்றை நிறுவுவதென்றும், 14—11—54ல் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவர் எனவும், அதுபோது மாணவத் தோழர்கள் அனைவரும் தவருது கலந்துகொள்ளுமாறும், தி. மு. கழகச் செயலாளர் மு. அ. கருப்பசாமி அறிவிக்கிருர்.

### லுங்கி மூட்டையெனக் கூறி......

### பால் பவுடரை பம்பாய்க்கு ஏற்றுமதி செய்ய முயற்சி!

சில நாட்களுக்கு முன் சென்னை பாய்க்கடை ரயில்வே பார்சல் அலுவலகத்தில் லுங்கி மூட்டைகள் என்பதாகக் கூறி, இரண்டு மூட்டைகள் பம்பாய்க்கு அனுப்பப்பட்டன. சென்னை 'சால்ட் கோர்ட்டார்ஸி'ல் வைத்து, சென்ட்ரல் ரயில் நிலைய போலீசார், சந்தேகத்தின் பேரில் அவற்றை உடைத்துப் பார்க்கையில், ரூ. 600 பெறுமானமுள்ள 15 சேர் பால்பவுடர் காணப்பட்டது. (பம்பாய் சர்க்கார் பால் பவுடர் இறக்குமதியை தடை செய்திருப்பது கவனிக்கத் தக்கது)

## மழலை மொழியும் குழவி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாய்க்கு மனமகிழ்வைத் தருகிறது — திரும்பத் திரும்ப குழந்தை பேசுகிறது—கேட்டு மகிழ்கிருள்; 'ஒரு முறை கேட்ட மழலைதானே, என்று, திரும்பத் திரும்பப் பேசும் குழந்தையின் மழலையால் மகிழாமலா இருக்கிருள் தாய்? 'ஒரு முறை சிரித்துத்தான் பார்த்தோமே,' என்று, மறுமுறை குழந்தைசிரிக்கும்போது, குழந்தையை அணைத்து மகிழாமலா இருக்கிருள் தாய்?

எத்தனை முறை சிரித்தாலும், ஓயாது பேசிக்கொண்டே இருந்தாலும், முத்தமிட்டு அணைத்து மகிழும் தாயைப் போலத்தான், மக்களும், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற குழந்தையை நடத்துகிருர்கள்; அதனுல் தான், ஓயாது, ஒழியாது கழகம் கூட்டம் நடத்தினுலும், தவருது ஆர்வம் ததும்ப வந்து, மக்கள், ஆதரவு தருகிருர்கள்.

மக்களின் உள்ளத்திலே பொதிந்துவிட்ட லட்சியங்களை நாம் எத்தனை முறை திரும்பத் திரும்பக் கூறினுலும், அது, அவர்களுக்கு இனிக்கிறது. இது மனிதருக்கு இயல்பானது.

தங்கள் உள்ளத்திலே இடம் பெற்றுள்ள கருத்துக்களை பிறர் எத்தனை முறை கூறினுலும் அத்தனை அளவு அவர்கள் மனம் மகிழ்வார்கள்.

விடுதலை பெறுவதற்கு வீறுகொண்ட மக்கள், தாங்கள் பெற விரும்பும் விடுதலை குறித்து எத்தனை தடவை பேசினுலும், கேட்டுக் கொண்டிருக்கவே விரும்புவர்.

இது—இப்படிப்பட்ட மக்களின் விடுதலை உணர்வு—ஒரு நாடு விடுதலை பெறுவதற்கு ஆயத்தமாகிவிட்டது; அந்த நாட்டின் விடுதலை சமீபிக்கிறது, என்பதற்கான எடுத்துக்காட்டுகளில் ஒன்று!"

## பட்டம் தாணுவின் அடக்குமுறை!

### நாகர்கோவில் நகரசபை கண்டனம்

நாகர்கோவில் நகரசபைத் தலைவரான எம். டி. அனந்தராமன், பட்டம் சர்க்காரால் கைது செய்யப்பட்டதையும், மற்றும் திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகளில் போலீஸ் அடக்குமுறை நிலவி வருவதையும் கண்டித்து, உபதலைவர் கிறிஸ்டோபர் தலைமையில் நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம். ஏ.